**30/08/2023**

**OS. No. 57/2022**

**பி.வா.சா.2. ஜானகிராமன்**

**குறுக்கு விசாரணை**

சாட்சி சொல்ல குமாரியம்மாள் அழைத்துவந்தார். நீதிமன்றத்தில் இருந்து சம்மன் எதுவும் வரவில்லை. எனக்கு 53 வயதாகிறது. நான் பிறந்த வருடம் 1970 ம் ஆண்டு. நான் 12ம் வகுப்பு முடித்துவிட்டு சென்னையில் தங்கி படித்தேன். ஸ்ரீரமனின் தாயார் கலா 1976 ல் இறந்தார். 1ம் வாதியை வரதராஜன் திருமணம் செய்துக்கொண்டது எனக்கு தெரியும். அப்போது எனக்கு 7 வயது இருக்கும். திருமணத்தில் நான் கலந்துகொள்ளவில்லை. பனையபுரத்தில் கோயிலில் திருமணம் செய்துக்கொண்டார்கள் என்று கேள்விபட்டேன். 1ம் பிரதிவாதியின் தாயார் இறக்கும் போது அப்போது எனக்கு 6 வயது. 6 வயதில் நான் 2ம் வகுப்பு படித்தேன். 1வது வாதியின் சகோதரி பத்மாவதியை தெரியும். பத்மாவதி வரதராஜனின் சகோதரர் கோவிந்தராஜியை திருமணம் செய்துக்கொண்டார் என்றால் தெரியாது. 1ம் வாதி அவருடைய சகோதரி பத்மாவதியை பார்க்க அடிக்கடி வீட்டுக்கு வந்ததில் வரதராஜன் 1ம் வாதியை சட்டவிரோதமாக திருமணம் செய்துக்கொண்டார் என்றால் சரியல்ல.

வரதராஜனின் முதல் மனைவி 1986 ல் தான் இறந்தார் என்றால் தவறு. 1976 ல் இறந்தார். வரதராஜனுக்கும் கலாவிற்கும் 1ம் பிரதிவாதி 15.02.1977 ல் பிறந்தார் என்றால் அது தவறு. கலா 1976 ல் இறந்துவிட்டார் என்பதற்கு இறப்பு சான்றிதழ் பார்க்கவில்லை. என்னுடைய நினைவு படி 1976 ல் இறந்துவிட்டார். கலா உயிருடன் இருக்கும் போது 1ம் வாதியை வரதராஜன் திருமணம் செய்துக்கொண்டது சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. நானும் 1ம் பிரதிவாதியும் Home அப்லைன்ஸ் தொழில் செய்துவருகிறோம். தொழில் போட்டி காரணமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் மீது மலர்கொடி என்பவர் புகார் கொடுத்து வழக்கு நடைபெற்றது என்றால் சரிதான். அந்த வழக்கில் நான் விடுதலையாகிவிட்டேன். நான் பொய் சாட்சி சொல்வது

வழக்கம் என்றால் சரியல்ல. வரதராஜனுக்கு 2ம் வாதியும் 1ம் பிரதிவாதியும் மட்டும் தான் வாரீசுகள் என்றால் சரியல்ல.